## மற்ற மாநிலங்களை விட தி.மு.க. ஆட்சியில்தான்

# தலித்துகளுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டது!

## சட்டப் பேரவையில் கழகக் கொறடா எ.வ.வேலு ஆதாரங்களுடன் விளக்கம்!

**சென்னை, ஆக. 30-**

**தலித்துகளுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்துவதில் மற்ற மாநிலங்களை விட திமுக ஆட்சி சிறப்பாக செயல்பட்டது என்று ஆதாரத்துடன் சுட்டிக்காட்டி சட்டப்பேரவையில் கழக கொறடா எ.வ.வேலு பேசினார்.**

சட்டமன்ற கூட்டத் தொடரில், நேற்று தி.மு.க. கொறடா எ.வ.வேலு பேசியதாவது:

இந்த சட்டமன்றத்தில் நேற்று பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு தவறான கருத்தை இங்கே பதிவு செய்துள்ளார்,



அதாவது தலித்துகளுக்கு எதிரான கொடுமைகள் நடந்த மாநிலத்தில் தமிழ்நாடு தான் முதலிடம் என்று குறிப்பிட்டுள்ளார், அவர் சொல்வது முற்றிலும் தவறானது,

அதனை இங்கு ஆதாரத்துடன் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவண காப்பகம் இந்தியாவிலேயே எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு குற்றங்கள் நடைபெறுகிறது என்று ஆய்வு செய்து அறிக்கை வெளியிடும், அந்த ஆய்வறிக்கையின்படி உண்மையான தரவு என்னவென்றால், தலித்துகளுக்கு எதிரான அதிக குற்றங்கள் நடைபெற்ற முதல் மாநிலமாக உத்திரபிரதேசமும், இரண்டாவது மாநிலமாக ராஜஸ்தானும் , மூன்றாவது மத்திய பிரதேசமும் நான்காவதாக பீகாரும் ஐந்தாவதாக மகாராஷ்டிரமும் , இடம்பெற்றுள்ளன, இதில் தமிழ்நாடு பத்தாவது இடத்தை தான் பிடித்துள்ளது,

அதாவது 71 ஆயிரம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உத்தரபிரதேசம் முதலிடத்திலும், 8,110 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு 10வது இடத்தில் இருக்கிறது,

அதிலும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் பழங்குடி இன மக்களுக்கு எதிரான குற்ற வழக்குகளில் தமிழ்நாடு 15வது இடத்தில் தான் இருக்கிறது என்பது தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் தரவுகளாகும்.

ஆகவே தி.மு.க. ஆட்சியில் தலித்துகளுக்கு எதிரான குற்றங்களை கட்டுப்படுத்தி, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டியுள்ளோம் என்பதை ஆதாரத்துடன் இந்த அவையில் பதிவு செய்கிறேன், ஆனால் பொதுப் பணித்துறை அமைச்சர் இந்த அவையில் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற கிராமத்து பழமொழி போல் தனது வாய்க்கு வந்தபடி தவறான தகவலை அவைக்கு தருவது சரியல்ல.

இவ்வாறு அவர் பேசினார்.

# குடந்தை, கரூரில் இருந்து நேபாளம் சென்ற 40 பேரின் குடும்பத்தினர் கண்ணீர்!

## பத்திரமாக மீட்டுக் கொண்டு வரக் கோரிக்கை!

*தஞ்சை, ஆக.30-*

*தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அடுத்த நாகேஸ்வரன் தெற்கு வீதியில் செயல்படும் சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் நேபாளத்துக்கு 57 பேர் ஆன்மீக சுற்றுலா சென்றனர். முன்தினம் நேபாளம் நாட்டின் ரசுவா மாவட்டத்தில் போதேகோஷி ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் 3 பஸ்களில் சென்ற 57 பேர் சிக்கினர். இதில் ஒரு பஸ்சின் டிரைவர் சாமர்த்தியத்தால் 20 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.*

*இதைதொடர்ந்து 2 பஸ்களுடன் மாயமான மயிலாடுதுறை ஓய்வுபெற்ற நீதிபதி சிவஞானம்(63), மூர்த்தி(65), பத்மினி(61), கடலூர் மாவட்டம் புவனகிரி திரிபுரசுந்தரி (67), பள்ளிப்படை முருகானந்தம்(69), தர்மபுரி புஷ்பா (54), கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சேர்ந்த பிரேமாவாணி (45), புஷ்பராணி(59), நெல்லூர் திம்மராயசாமி(46), மம்தா(39), மயிலாடுதுறை மாவட்டம் கழுக்காணிமுட்டம் புஷ்பலதா(60), நல்லூர் ராஜேஷ்வரி(57), கூறைநாடு வெங்கட்ராமன்(50), நாமக்கல் வசந்தபுரம் கிருஷ்ணவேணி(65), புதுச்சேரி மாநிலம் காமராஜ் நகர் ஆனந்தசுந்தரி(58), பெட்டியார்பாளையம் வைஷ்ணவி(50), கீதா(68), தஞ்சை மாவட்டம் களிமேடு அன்பழகி(67), ராஜப்பன் நகர் சித்ரா(61), வ.உ.சி நகர் சிவயோகம்(65), பூக்காரலாயம் இளவரசி(70), கிருஷ்ணாபுரம் தங்கமதி(49), கும்பகோணம் சத்யம் நகர் ராம்குமார்(60), இவரது மனைவி கீதா(56), சுவாமிமலை வடக்குவீதி ராஜ்குமார்(62), இவரது மனைவி ஜெயந்தி(54), செட்டிமண்டபம் ரமேஷ்(68), புதுமணி வடக்கு தெரு திருமலை ராஜன்(54), இவரது மனைவி தையல்நாயகி(54), கர்ணகொல்லை அக்ரஹாரம் சாய்நாத்(70), இவரது மனைவி ஜெயலட்சுமி(64), இவர்களது மகள் கேதாரகவுரி(32), காளிமுத்து நகர் சையது உமர் பாரூக்(29), திருவண்ணாமலை கண்ணம்மாள்(67), திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணமங்கை கலைச்செல்வி(66), மன்னார்குடி வடுவூர் பாலசுப்பிரமணியன்(58) ஆகிய 36 பேரை தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.*

*இதுவரை மீட்கப்பட்ட கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சேர்ந்த தியாகராஜன் (49), கிருபாகரி(49), பழனியப்பன்(69), கலைமதி(67), முத்துக்குமரேசன்(56), மைதிலி (49), நெய்வேலி டவுன்ஷிப் திருமாவளவன்(62), சென்னை மணப்பாக்கம் சத்யா (58), வேளச்சேரி நாவு கபீர்தாஸ்(55), வேளச்சேரி விஜய புவனேஸ்வரி(55), பெசன்ட் நகர் சாந்தி(47), மாறன்(57), கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்த கனகசபை(68), ராதை(64), கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சேர்ந்த ரகுநாதன்(56), மயிலாடுதுறையை சேர்ந்த மணிமேகலை(65), ரத்னகுமார்(65), பூங்குழலி(62), திருச்சியை சேர்ந்த வள்ளிநாயகி(62), சிவரஞ்சனி(46), கற்பகம்(62) ஆகிய 21 பேரை பாதுகாப்புடன் ஹெலிகாப்டர் மூலம் காத்மாண்டுவுக்கு அழைத்து வரவுள்ளனர். பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.*

*இதுகுறித்து கும்பகோணம் சூப்பர் யாத்ரா ஏஜென்சி உரிமையாளர் சையது சாதிக் கூறுகையில், “மாயமான 36 பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் எங்களது அலுவலகத்துக்கு வந்து விசாரித்து செல்கின்றனர். சிலர் போனில் தொடர்பு கொள்கின்றனர்” என்றார். ஆன்மிக பயணம் மேற்கொண்ட சுவாமிமலையை சேர்ந்த ராஜ்குமார், ஜெயந்தி தம்பதியரின் மகன்கள் மணிகண்டன், கோவிந்தராஜ் ஆகியோர் கூறியதாவது: எங்கள் பெற்றோர் ராஜ்குமார், ஜெயந்தி ஆகியோர் சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் கடந்த 23ம் தேதி கும்பகோணத்தில் இருந்து ஆதி கைலாசுக்கு சென்றனர். 23, 24, 25ம் தேதிகளில் எங்களிடம் பேசினார்கள். 26ம் தேதி காலையில் அவர்கள் சென்ற இடத்தில் வெள்ளப்பெருக்கு என கேள்விப்பட்டோம். அதை பார்த்ததில் இருந்து எங்களது குடும்பமே மன உளைச்சலில் உள்ளது. இதுவரை 21 பேரை மீட்டுள்ளனர். அவர்களை போன்று எங்களது பெற்றோர் மற்றும் மாயமானவர்களை மீட்டு கொண்டு வர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.*

*கரூரில் இருந்து ஆன்மீக சுற்றுலாவுக்கு ஒரே குழுவாக நேபாளத்துக்கு சென்ற கரூர் வடக்கு காந்தி கிராமம் ஹவுசிங் போர்டை சேர்ந்த அன்பரசு, கரூர் கேவிபி நகர் பெரியார் நகரை சேர்ந்த தனலட்சுமி(60), கரூர் காமராஜபுரம் வடக்கு தெருவை சேர்ந்த கற்பகம்(55), கரூர் அருணாசலம் 3வது தெருவை சேர்ந்த தமிழரசி அசோகன் ஆகிய 4 பேரும் மாயமாகியுள்ளனர். இவர்களின் செல்போன் எண்ணை உறவினர்களால் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதுகுறித்து கற்பகத்தின் கணவர் பெரியசாமி கூறுகையில், எனது மனைவி கற்பகம் கடந்த 14ம் தேதி கயிலாய யாத்திரைக்கு புறப்பட்டு சென்றார். நேற்று முன்தினம் காலை அவரை தொடர்பு கொண்டு பேசிய போது நாங்கள் தற்போது சீன நாட்டின் எல்லையில் இமிகிரேஷன் பணிகளுக்காக காத்திருக்கிறோம் என்றனர். அதன் பின்னர் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.*

*அவரை தேடுவதற்காக எங்களது குடும்பத்தினர் சிலரை அனுப்பி வைத்துள்ளேன் என்றார்.*

*நேபாளத்துக்கு சென்ற கரூர் வடக்கு காந்தி கிராமம் ஹவுசிங் போர்டு பகுதியை சேர்ந்த அன்பரசு புலியூர் காளிபாளையம் பகுதியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இதுகுறித்து அவரது மகள் கூறுகையில், நான் எனது தந்தையிடம் தினமும் காலையில் எங்கு இருக்கிறார் என்று லொகேஷன் பகிருமாறு கூறுவேன். அதன்படி நேற்று முன்தினம் காலை அவரை தொடர்பு கொண்டு பேசியபோது சீன நாட்டின் எல்லை பகுதியில் காத்திருப்பதாக கூறினார். அதன்பிறகு எனது தந்தையை தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால் எங்களது குடும்பத்தினர் பதற்றத்துடன் இருந்து வருகிறோம் என்றார்.*

## சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில்

# மேயர் பிரியா - கவுன்சிலர்கள் கறுப்பு உடையில் பங்கேற்றனர்!

## த.வெ.க. அரசு சென்னை மாநகராட்சிக்கு நிதி ஒதுக்காததற்குக் கண்டனம்!

*சென்னை, ஆக. 30-*

*சென்னை மாநகராட்சியின் மாதாந்திர மன்றக் கூட்டம் இன்று நடைபெற்ற நிலையில், மாநகராட்சிக்குத் தேவையான நிதியை தமிழ்நாடு அரசு வழங்கவில்லை எனக் குற்றம்சாட்டி மேயர் ப்ரியா உட்பட திமுக கவுன்சிலர்கள் கறுப்புச் சட்டை அணிந்து கூட்டத்தில் பங்கேற்று தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.*

*சென்னை மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் நிதிப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கவுன்சிலர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்படவில்லை என்றும், வேளச்சேரி மேம்பாலம் உள்ளிட்ட சில முக்கியத் திட்டங்களும் முன்னேறாமல் இருப்பதாகவும் மாநகரட்சி நிர்வாகம் குற்றஞ்சாட்டுகிறது.*

*மேலும், மாநகராட்சிக்காக பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு உரிய தொகை வழங்கப்படாதது தொடர்பாகவும் புகார்கள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.*

*சென்னையில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களுக்காக ஆண்டுதோறும் மாநகராட்சி கணிசமான தொகையை செலவிட்டு வருவதோடு, காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், தனியார் நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு உணவு கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவையும் மாநகராட்சியே ஏற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுபோன்ற திட்டங்களுக்கான செலவினங்களை சமாளிக்க தமிழ்நாடு அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்று கவுன்சிலர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.*

*இந்த நிலையில், மாநில அரசு பல்வேறு திட்டங்களுக்க்காக கடன் பெற்று செலவினங்களை மேற்கொண்டு வரும் நிலையில், சென்னை மாநகராட்சியின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு சிறப்பு நிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என துணை மேயர் மகேஸ் குமார் வலியுறுத்தியுள்ளார்.*

*மாநகராட்சிக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக மேயர் பிரியா அண்மையில் முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும், நகராட்சி நிர்வாகத் துறையின் பொறுப்பை கவனித்து வரும் முதலமைச்சரிடம் மாநகராட்சி ஆணையர் நேரடியாக பேசி தேவையான நிதியைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் மகேஸ் குமார் தெரிவித்தார்.*

*சென்னை மாநகராட்சிக்கான நிதி விவகாரம் தற்போது அரசியல் ரீதியாகவும் கவனம் பெற்றுள்ள நிலையில், மேயர் ப்ரியா உட்பட திமுக கவுன்சிலர்கள் அனைவரும் நேற்று முன்தினம் (ஆகஸ்ட் 28) நடந்த மாதாந்திர மன்றக் கூட்டத்திற்கு கறுப்புச் சட்டை அணிந்து வந்து எதிர்ப்பை பதிவு செய்தது பரபரப்பை ஏற்படுத்தியது.*

## நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி

# 50 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஆக. 30-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 50 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்ட மானது 50 வது வட்டக் கழகச் செயலாளர் வி.ஆர். லிங்கேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதிச் செயலாளர் த.ஜீவா முன்னிலையில் 27.08.2026, வியாழக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் வண்டிகுடியிருப்பு பகுதியில் வைத்து நடைபெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லைசெல்வம், மாநகர பிரதிநிதி மகேஷ், தெற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கா.சுந்தர், கழக நிர்வாகிகள் எஸ்.ராமலிங்கம், சி.ராஜலிங்கம், என்.ராஜேந்திரன், எஸ்.லிங்கம், எஸ்.பாலமுருகன், நாகராஜன், மகளிர் அணி நிர்வாகிகள் எஸ். சுசீலா, என்.ஜெயா உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.


தீர்மானம்:1 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2 கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்டக் கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

## சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்

# வெள்ளை மாளிகையில்..! பேரறிஞர் அண்ணா!






தம்பி! அமெரிக்காவின் ஆட்சி பீடம் உள்ள இடத்துக்கு ‘வெள்ளை‘ மாளிகை என்று பெயர் இருக்கிறது. ஆனால் அந்த ஆட்சியிலே உள்ளவர்கள் அனைவரின் நிறமும் வெள்ளையல்ல. கருநிறம் கொண்டவர்கள், நீக்ரோ (ஆஃப்ரோஅமெரிக்க) மக்கள். நிறம் கருப்பு, இனம் நீக்ரோ, பூர்வீகம் ஆப்பிரிக்கா கண்டம். ஆனால் அவர்கள் அமெரிக்கர்கள். சட்டம் சொல்லுகிறது. ஆபிரகாம் லிங்கன், அவர்களும் அமெரிக்கர்களே என்று வார்த்தைகளை வீசி மட்டுமல்ல, ஒரு பெரிய பயங்கரமான உள்நாட்டுப் போரே நடத்திடக் கூறிட வேண்டி நேரிட்டது. “சரி” என்றனர். உதடு அசைந்தது தம்பி..உதடு! உள்ளம் இருக்கிறதே! அதிலே புற்றரவு புகுந்துகொண்டுதான் இருக்கிறது. சாகவில்லை. சாகடிக்கவும் முடியவில்லை. அதனைச் சாகடிக்கத் துணிந்து கிளம்பிய கென்னடியைக் கொடியோர் கொன்று விட்டனர் பதறப் பதற! பக்கம் இருந்த அவர் துணைவியார் ஜாக்குலின் துடிக்க..துடிக்க!

அந்த வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பு மனிதரை (ஆஃப்ரோஅமெரிக்கர்), நீக்ரோவை அதிபராக அமரச் செய்து பார்க்கிறார், ‘ மனிதன்’ (The Man) எனும் ஏடு எழுதியுள்ள இர்விங் வாலாஸ்(Irving Wallace) என்பவர். அந்தப் புத்தகத்தைப் படித்ததிலிருந்து எனக்கு ஒரே ஆவல், உன்னிடம் கூறவேண்டும் என்று.

அமெரிக்காவில் முன்பு, நீக்ரோக்கள் உயிருள்ள ஜீவன்கள் அல்ல, உரிமைப் பெற்ற மாந்தர் என்றல்ல, வெறும் உடைமைகள் என்றே கருதப்பட்டு வந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்களை வேட்டையாடிப் பிடித்துக் கொண்டு வந்து அமெரிக்காவில் விற்றுப் பொருள் குவித்து வந்தனர் கொடியவர்கள். இந்தச் சூழ்நிலையில் வெள்ளை மாளிகைக்கு ஒரு கருநிறத் தலைவர் என்கிறபோதுதான் வியப்புடன் கூடிய வெடவெடப்பு எடுக்கிறது நிறவெறியர்களுக்கு.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தமது பதவிக்காலத்தில் இறந்துபடுவாரானால், உடனடியாகத் துணைத் தலைவர், குடியரசு தலைவராக்கப்படுவார். இது அங்கு மரபு. குடிஅரசுத் தலைவரும் இறந்துபட்டால் துணைத்தலைவர். துணைத் தலைவரும் இறந்துபட்டால்? பாராளுமன்றத் தலைவர். அவரும் இறந்துபட்டால்? பாராளுமன்ற மேலவைத் தலைவர். இப்படி ஒரு மரபு பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுக் கொண்டு, தமது கற்பனையைக் கட்டியிருக்கிறார். அப்படி ஒரு சூழ்நிலையை ‘மனிதன்’ என்ற ஏடு உருவாக்கிக் காட்டுகிறது.

திடீரென்று அமெரிக்கக் குடியரசின் துணைத்தலைவர் இறந்துவிடுகிறார். குடியரசுத் தலைவர், நண்பர் இறந்ததால் ஏற்பட்ட துக்கத்தைத் துடைத்துக் கொள்ளவும் நேரமின்றி, ஐரோப்பாவில் பிரான்ஸ் நாட்டில் ஓர் ஊரில், சோவியத் அதிபரைச் சந்தித்து ஆப்பிரிக்கப் பிரச்சினை பற்றிப் பேசவேண்டி ஏற்பட்டுவிடுகிறது. அந்த மாநாட்டுக்குச் சென்றிருக்கிறார்.

அமெரிக்கத் தலைநகரில், மற்ற அமைச்சர்கள், உயரதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களுடன் மாநாட்டு இடைவேளையில் தொலைபேசி மூலம் பேசுகிறார் குடியரசுத் தலைவர். தொலைபேசி நின்றுவிடுகிறது. ஏதோ இயந்திரக் கோளாறு? பதைபதைக்கிறார்கள் பாதியிலே பேச்சு நின்றுவிட்டதே என்று!

“அய்யோ” என்று அவர்கள் அலறும்படியான செய்தி வருகிறது தொலைபேசி மூலம்! நம்பமுடியவில்லை.. அதிர்ச்சி.. குழப்பம்.. கலக்கம். தொலைபேசி தெரிவிக்கிறது, குடியரசுத் தலைவர் திடீரென இறந்துவிட்டார்! மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மாளிகையின் மேற்பகுதி இடிந்து விழுந்துவிட்டது. அந்த இடத்திலேயே குடியரசுத் தலைவர் இறந்து போனார்.

குடியரசுத் துணைத்தலைவரோ ஏற்கனவே மறைந்துபோனார். தலைவரோ பிரான்சிலே பிணமாகிக் கிடக்கிறார். எத்தனை சோகத்தைத் தாங்கிக் கொள்ள முடியும். தத்தளித்தனர். அந்த தத்தளிப்புக்கு இடையிலேயே ‘மரபு’ குறிப்பிடுகிறபடி, பாராளுமன்றத் தலைவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்க வேண்டுமே?

கூப்பிடுக அவரை! என்றார் ஓர் அமைச்சர். “அவர் எங்கே இங்கே இருக்கிறார்? அவருமல்லவா, மாநாட்டில் கலந்துகொள்ள குடியரசுத் தலைவருடன் சென்றிருக்கிறார்” என்று விவரமளிக்கிறார் வேறொருவர். மீண்டும் பரபரப்பு. பதைப்பு.

தொலைபேசி வேலை செய்கிறது. அடிபட்டவர்களில் அவரும் ஒருவர். ஆனால் உயிர் போகவில்லை. மருத்துவமனையில் கிடத்தப்பட்டிருக்கிறார் என்று செய்தி கிடைக்கிறது. ஒருவருக்கொருவர் தைரியத்தைத் தருவித்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் அனைவரையும் அடித்துக் கீழே தள்ளிவிடத்தக்க தாக்குதலை நடத்திற்று தொலைபேசி.

“அவரும் இறந்துவிட்டார் மருத்துவமனையில்” என்ற செய்தியைத் தெரிவித்தது.

குடியரசுத் தலைவர், துணைத்தலைவர், பாராளுமன்றத் தலைவர் மூவருமல்லவா மறைந்தனர். இனி, குடியரசுத் தலைவராக வேண்டியவர் பாராளுமன்ற மேலவைத் தலைவர் என்றார் ஒருவர். அவர் யார்? என்ற நினைப்புமற்ற நிலையில் சோகத்துடன், “ஆம்” என்றனர் மற்றையோர். தம்பி.. அந்த மேலவைத் தலைவர் தான் டக்ளஸ் டில்மன் என்ற நீக்ரோ. செனட் சபையின் தலைவர் டக்ளஸ் டில்மன்.

மரபு இருக்கிறதே? தலைவர், துணைத்தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகியோர் இறந்துபடின், செனட் சபைத் தலைவரே குடியரசுத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று!

எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தீட்டி, ஒரு நீக்ரோவைக் குடியரசுத் தலைவர் ஆக்கிக் காட்டியுள்ளார் ஆசிரியர் பார்த்தனையா?

மரபின்படி உயர்நீதிமன்றத் தலைவர் வருகிறார். பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது. “அமெரிக்க நாட்டுக்கு அமைந்துள்ள அரசியல் சட்டத்திட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றியும் அதற்குக் கட்டுப்பட்டும் நான் ஆட்சி நடத்தி வருவேன்“ என்று உறுதிமொழி கூறுகிறார் டில்மன்.

“அமெரிக்க குடியரசுத் தலைவரே.. வாழ்க! கர்த்தர் தங்களை அமெரிக்கக் குடியரசுத் தலைவராக அமரும் முதல் நீக்ரோவைக் காத்திடுவாராக!” என்று உயர்நீதிபதி கூறுகிறார். சூழ நிற்கிறார்கள் வெள்ளை இனத்தவர்.

**‘வெள்ளை மாளிகையில்’ என்ற நூலில் பேரறிஞர் அண்ணா இதனை அழகாக விவரித்து, இந்தியாவில் நிலவும் தீண்டாமையை, தில்லைக் கோவில் தீட்சிதர்கள் செயல்பாடுகள் வரை சுட்டிக்காட்டி எழுதியுள்ளார்.**

**இர்விங் வாலாஸ் கற்பனையில் எழுதிய மனிதன் என்ற புதினத்தின் உட்கருத்து, பின்னாளில் உண்மையாக நடந்தேறியது. கறுப்பினத்தவர் ஒருவர் நேரடியாகவே அமெரிக்க மக்களால் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அண்ணா இல்லை. அவர் உருவாக்கிய தி.மு.கழகம் வலுவாக இருக்கிறது. அதனைக் கட்டிக்காத்த கலைஞரும் இருந்தார். அமெரிக்காவின் முதல் ஆஃப்ரோஅமெரிக்க குடியரசுத் தலைவரானார் பராக் ஒபாமா. அவரை நேரில் சந்தித்து உரையாடினார் திராவிட இயக்கச் சிந்தனையாளரான முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன்.**